Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No.42/2019**

**Deposition of PW.3 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோபாலகிருஷ்ணன் | ஜாதி | : | |
| த/பெ | : | குமரேசன் | தொழில் | : | மாவட்ட பதிவாளர், தாம்பரம். |
| கிராமம் | : | மதுரை | சமயம் | : | |
| தாலுகா | : | மதுரை | வயது | : | 43/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.02.2026

( 2 ஆம் எதிரி ஆஜர், 1 ஆம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்படுகிறது.)

**1,2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு உங்கள் மேல்அதிகாரிகள் கொடுத்த எழுத்துப்பூர்வமான அனுமதியை நீங்கள் முதல் விசாரணையில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாய்மொழி அனுமதி பெற்று வந்து சாட்சியம் அளிக்கிறேன். தற்போதும் எழுத்துப்பூர்வமான அனுமதியை சாட்சியம் அளிக்க கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை.வாய்மொழி அனுமதி பெற்று வந்து சாட்சியம் அளிக்கிறேன். மற்றும் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டுள்ளது. உங்களுக்கு இவ்வழக்கு சம்மந்தாக நேரடியாக எதுவும் தெரியாது என்றும், ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் பிறப்பு சான்றிதழின் உண்மை தன்மையை சரிபார்ப்பதற்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் பிறப்பு சான்றிதழின் அசல் அல்லது நகலை உங்களுக்கு அனுப்பினார்களா என்றால் நகல் அனுப்பினார்க்ள் அசலை அனுப்பவில்லை.அதற்கான பதிலை நீங்கள் கடிதத்தின் மூலம் அனுப்பி விட்டீர்கள் என்றால் சரிதான். அதன்பிறகு உங்களை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. வாக்குமூலம் பெற்றார்கள். உங்களை போலிசார் விசாரிக்கவில்லை என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பின்னிட்டு கடிதத்தை தயார் செய்து அதை நீங்கள் ஏற்கனவே அனுப்பியதாக பொய் சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்விகள்**

1. நீங்கள் நீதிமன்ற சாட்சியம் அளிப்பதற்கு உங்கள் அலுவலகத்தில் உங்களுக்கு கொடுக்கப்பட்ட அனுமதி கடிதம் உள்ளதா என்றால் இல்லை .

2. நீங்கள் மண்டல பாஸ்போர்ட் அலுவகலம், மதுரையில் தான் பணிபுரிகிறீர்கள் என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் உள்ளது, என்னுடைய அடையாள அட்டை உள்ளது. அந்த ஆவணம் (சா.சா.ஆ.3) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor